மஹஓய பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 08 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 06 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மஹஓய பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துக்களாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் ரூபா 5,029,183 கூட்டுப்பெறுமதியொன்று காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பேரேட்டின் பிரகாரம் எந்தவொரு பெறுமதியும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 328,368 ஆக இருந்ததுடன் வருமானச் செலவினக் கணக்கில் அது ரூபா 345,983 ஆக ரூபா 17,615 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பேரேட்டின் பிரகாரம் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 286,600 ஆக இருந்த போதிலும், அது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகையில் ரூபா 127,363 ஆக ரூபா 159,237 தொகை குறைத்துக் காண்பிக்கப்படுகின்றது.

(ஈ) பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான ஏனைய நிதி உதவிகளின் கூட்டுமொத்தம் ரூபா 7,576,696 ஆக இருந்ததுடன் அது வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 7,624,909 ஆக ரூபா 48,213 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் ரூபா 408,650 ஆக இருந்ததுடன் வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 420,800 ஆக ரூபா 12,150 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வாடகை வருமானம் ரூபா 4,127,500 ஆக இருந்ததுடன் வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 4,124,500 ஆக ரூபா 3,000 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை

ரூபா 22,459,274 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடும் பொருள் மெய்மையாய்வு அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2006 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண விஷேட ஏற்பாடுகள் அதிகாரச் சட்டம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 88,925 தொகையான முத்திரை வரியை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிக் கோப்பு - விதி 153 | வருமான நிலுவைத் தொகை தொடர்பான கூற்றொன்று பீ.எஸ்.07 படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் - 757(2) | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,765,286 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,103,267 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 662,019 அதிகரிப்பொன்றைக் காண்பித்தது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிதி விளைவுகள் தொடர்பான மீளாய்வொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) மீண்டெழும் வருமானத்தை பகுப்பாய்வு செய்தபோது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணம், பிடியாணைக் கட்டணம் மற்றும் தண்டப்பண வருமானம் என்பன 16 சதவீதம் முதல் 81 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பும் சேவைகளுக்கான கட்டணம் மற்றும் ஏனைய நிதி உதவிகள் 11 சதவீதம் முதல் 27 சதவீதம் வரையிலான குறைவையும் காண்பித்தது.

(ஆ) மீண்டெழும் செலவினத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சம்பளமும் படிகளும், பிரயாணச் செலவினம், வழங்கலும்

உபகரணங்களும், மூலதனச் சொத்துக்களை பழுதுபார்த்தலும் பராமரித்தலும், உதவிப் பணம், பங்களிப்புப் பணமும் மானியமும், ஓய்வூதிய நலன் மற்றும் பணிக்கொடைச் செலவினங்கள் 09 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையிலான அதிகரிப்கையும் காண்பித்தது.

2.3 வருமான நிருவாகம்

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | 2014 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 3,000 | 28,200 | - |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 459,000 | 4,124,500 | - |
| (iii) | வாடகை | 3,254,370 | 420,800 | 637,675 |
| (iv) | பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 309,000 | 1,479,708 | 53,166 |
| (v) | ஏனைய வருமானம் | 9,903,336 | 1,479,708 | - |
| (vi) | ஏனைய மானியம் | - | 345,983 | 358,863 |

2.3.2 முத்திரைக் கட்டணம்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணமான ரூபா 127,363 தொகையை பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான 15 வாகனங்கள் காணப்படுவதுடன் அதில் 05 வாகனங்கள் தற்போது பாவனைக்கு எடுக்கப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்களை பழுதுபார்ப்பதற்கு அல்லது வேறு பொருத்தமான செயற்பாடுகளை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஊழியர் கடனில் 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 22,259 கடன் மீதி 02 வருடங்கள் முதல் 08 வருடங்கள் வரையான காலப்பகுதியில் அறவிடப்படாது காணப்படுகின்றது. இந்தக் கடன் தொகையை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தலைவரினால் 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் நலன்புரிச் சங்கத்திற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 15,070 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொருட் பதிவேடு மற்றும் களஞ்சிய விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது 03 Auto Level கண்ணாடிகள் பொருட் பதிவேட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்